Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 233

செவ்வாய்க்கிழமை
16 ஜூலை 2024

ஆனி 32 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

**முச்சந்தி முரளி**



"பள்ளிக்கூடங்களில அதிபர்மார் கதிரைக்கு அடிபட்டு முடிஞ்சு இப்ப டாக்குத்தர்மார் தொடங்கிட்டினம் பாருங்கோ"


# சாவகச்சேரி மருத்துவமனைக்கு மீண்டும் வந்த மருத்துவர் அர்ச்சுனா!

## யார்தான் பதில் அத்தியட்சகர்? குழப்பநிலையில் பொதுமக்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 16

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் முன்னாள் பதில் அத்தியட்சகரான இராமநாதன் அர்ச்சுனா நேற்றுத் திங்கட்கிழமை மீண்டும் சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்குச் சென்றமையால் அங்கு குழப்பமான நிலைமை ஏற்பட்டது.

11





## பரந்தனில் நேற்று அமைச்சர் அமுனுகம!

யாழ்ப்பாணம், ஜூலை 16

கிளிநொச்சி மாவட்டத்தின் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலைக்கு முதலீட்டு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம நேற்றுப் பி.ப. 3 மணியளவில் களப் பயணம் மேற்கொண்டார்.

வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கவுள்ள

11

பல்கலைக்கழகங்களின்

## கல்விசாரா ஊழியரின் போராட்டம் முடிவுக்கு!

கொழும்பு, ஜூலை 16

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் தொழிற்சங்கப் போராட்டம், 75ஆவது நாளான நேற்றுடன் முடிவுக்கு வந்துள்ளது.

11

கொக்குத்தொடுவாய்

## மனிதப் புதைகுழி அகழ்வு நிறைவு!

52 மனித எச்சங்கள் மீட்கப்பட்டன

நீதிமன்ற நடவடிக்கை தொடரும்

விரிவு: பக். 10



ஜனாதிபதித் தேர்தல்

## பிற்போடக்கோரிய மனு நீதிமன்றால் தள்ளுபடி!

கொழும்பு, ஜூலை 16

அரசமைப்பின் 19ஆவது திருத்தம் நிறைவேற்றப்படாததால், அதனை பொதுமக்கள் கருத்துக் கணிப்புக்கு உட்படுத்தி நிறைவேற்றும் வரை ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது அரசமைப்புக்கு முரணானது எனத் தீர்ப்பு வழங்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு உயர்நீதி

11

## மின்சாரக் கட்டணம் இன்றுமுதல் குறைப்பு!

கொழும்பு, ஜூலை 16

மின் கட்டணத்தை 22.5 சதவீதத்தால் இன்றுமுதல் குறைப்பதற்கு இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

மின்சாரக் கட்டணக் குறைப்புத் தொடர்பான முன்மொழிவுகளை இலங்கை மின்சாரசபை அண்மையில்,

11

யாழ். நகரில் நாளை

## ஆடிப்பிறப்பு கொண்டாட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 16

சோமசுந்தர ஞானத் தமிழ்மன்றத்தின் ஏற்பாட்டில் ஆடிப்பிறப்புக் கொண்டாட்ட நிகழ்வு ஆடிப்பிறப்பு நாளான நாளை புதன்கிழமை காலை 9.30 மணியளவில் யாழ்ப்பாணம் பிரதான பேருந்து

11



## சிறிலங்காப் படையினர் மீது தமிழருக்கு கோபமில்லையாம்

'அதனால்தான் எனக்கு வாக்கிட்டனர்'

பீல்ட்மார்ஷல் பொன்சேகா தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 16

தமிழ் மக்களுக்கு இராணுவத்தினர் மீது கோபம் உள்ளதெனில் ஜனாதிபதித் தேர்தலில் எனக்கு ஆதரவாக வாக்களித்திருப்பார்களா? என்று முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் பொன்சேகா மேலும் தெரிவித்ததாவது:-

11

கருகம்பனையில் விபத்து

## குழந்தை உட்பட இருவருக்குக் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 16

கீரிமலை – கருகம்பனைக்கு அருகாக இடம்பெற்ற விபத்தில், குழந்தை, இரண்டு பெண்கள் என மூவர் காயமடைந்துள்ளனர்.

கருகம்பனை சந்தைக்கு அருகாகவே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. மதுபோதையில் மோட்டார்சைக்கிளில் வந்தவர்களால்தான் இந்த விபத்து ஏற்படுத்தப்

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாய்ச்சொல்லில் இல்லாது செயலில் காட்ட வேண்டும்



## ரணிலுக்கு இடித்துரைத்த சாணக்கியன்

**கொழும்பு, ஜூலை 16**

**தலைவர் பிரபாகரனின் இளைய மகன் பாலச்சந்திரன் மற்றும் இசைப்பிரியா ஆகியோர் விவகாரம் தொடர்பில் பொறுப்புக்கூறல் வெளிப்படுத்தப்படும் என ஜனாதிபதி கூறியுள்ளார். சொல்லில் அல்ல இது செயலில் வெளிப்படுத்தப்படவேண்டும் - இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் வலியுறுத்தியுள்ளார்.**

அரசியல் தீர்வு, பொறுப்புக்கூறல் என்பவற்றில் சாதகம் தென்பட்டால் மாத்திரமே தமிழர்களின் வாக்குகளை ஜனாதிபதி எதிர்பார்க்கலாம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் சாணக்கியன் மேலும் தெரிவித்துள்ளதாவது-

ஜனாதிபதித் தேர்தலில் தெற்கில் இம்முறை மும்முனைப்போட்டி நிலவக்கூடும். வழமையாக இருவருக்கிடையில்தான் போட்டி நிலவும். தற்போதைய சூழ்நிலையில் சஜித், ரணில், அநுரவுக்கிடையில் போட்டி நிலவுகின்றது. எனவே, ஜனாதிபதி யார் என்பதைத் தீர்மானிக்கும் சக்தியாக தமிழ் பேசும் மக்களே திகழ்வார்கள்.

இதை உணர்ந்துள்ளதால்தான் ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர், அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் அடிக்கடி வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு வந்து செல்கின்றனர். வடக்கு, கிழக்கு வாக்குகளின் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ளனர். இந்தச் சந்தர்ப்பத்தை நாம் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

மாகாணங்களில் இருந்து பறிக்கப்பட்ட அதிகாரங்களை மீள வழங்குவது தொடர்பில் ஜனாதிபதி பேசியுள்ளார். வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு 5 தடவைகள் அல்ல 50 தடவைகள் வேண்டுமானாலும் வாருங்கள், ஆனால் அதிகாரப்பகிர்வு உள்ளிட்ட விடயங்களில் வடக்கு, கிழக்கு மக்கள் மிகத் தெளிவாக உள்ளனர். ஜனாதிபதித் தேர்தலில் வாக்குகள் அவசியமெனில் அதற்கு முன்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முக்கியமான சில விடயங்களைச் செய்தாக வேண்டும்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, பொறுப்புக்கூறல் என்பன நிறைவேற்றப்படவேண்டும். பிரபாகரனுடைய இளைய மகன் பாலச்சந்திரன், இசைப்பிரியா விவகாரங்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை வெளிப்படுத்தும் வகையில் விசாரணை இடம்பெறும் என ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார். சொல்லாமல், அதைச் செய்யவேண்டும். அப்போதுதான் வாக்குகள் பற்றிப் பரிசீலிக்கலாம். மாறாக வடக்கு, கிழக்குக்கு வந்து செல்வதால் வாக்குகள் கிடைக்கப்போவதில்லை. வடக்கு, கிழக்கில் உள்ள ஒட்டுக்குழுக்கள் ஜனாதிபதிக்கு ஆதரவளிப்பதாக அறிவித்துள்ளன. இதுவும் ஜனாதிபதிக்கு பாதகமாக அமையக்கூடும் - என்றார். (எ-44)

# நிராசையானது நாமலின் ஆசை

கொழும்பு, ஜூலை 16

ஜனாதிபதி வேட்பாளர் விடயத்தில் நாமல் ராஜபக்சவின் நிலைப்பாட்டுக்கு எதிரான நிலைப்பாட்டில் ஷிரந்தி ராஜபக்ச மற்றும் யோஷித ராஜபக்ச ஆகியோர் உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதித் தேர்தலுக்காக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி சார்பில் பொருத்தமான வேட்பாளர் ஒருவரை முன்வைக்க முடியாமல் போனால், அதற்குத் தான் தயார் என்று நாமல் ராஜபக்ச தெரிவித்திருந்த போதும், ஷிரந்தி ராஜபக்ச மற்றும் யோஷித ராஜபக்ச ஆகியோர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குகின்றனர் என்று தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த 10ஆம் திகதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இரகசிய அரசியல் கலந்துரையாடல் ஒன்றுக்காக பஸில் ராஜபக்ச மற்றும் மஹிந்த ராஜபக்ச கலந்துகொண்டபோது இந்தத் தகவல் வெளியாகியுள்ளது. இந்தக் கலந்துரையாடல் ரணில் விக்கிரமசிங்க தரப்பிலிருந்து சாகல ரத்நாயக்க மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தநிலையில் ராஜபக்ச குடும்பத்திலிருந்து ஷிரந்தி ராஜபக்ச மற்றும் யோஷித ராஜபக்ச ஆகியோர் அதற்குத் தலைமை தாங்கியுள்ளனர். அந்தக் கலந்துரையாடலில் பொது வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்கவை முன்னிலைப்படுத்தவேண்டும் என்ற யோசனை தொடர்பில் அநேக காரணங்கள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. அதற்கான முதற்கட்ட இணக்கப்பாடு ராஜபக்ச குடும்பத்திடமிருந்து பெறப்பட்டுள்ளது என்றும் தெரிய வந்துள்ளது.

நாமல் ராஜபக்ச 2029ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து இம்முறை ஒத்திகை பார்க்க மேற்கொண்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-இ)

# இந்தியாவுக்கு இலங்கை நன்றிக்கடன்பட்டுள்ளது



## ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 16

இலங்கை சில வருடங்களுக்கு முன் நெருக்கடியை எதிர்கொண்ட வேளை பெரும் நிதியுதவியை வழங்கியமைக்காக இலங்கை இந்தியாவுக்கு எப்போதும் நன்றிக்கடன்பட்டுள்ளது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப்ஹக்கீம் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

எரிபொருள் நெருக்கடி மக்களைப் பாதித்த நிலையில் இலங்கைமிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டவேளை இந்தியா பெரும் நிதியுதவியை வழங்கியது. இந்தியா தக்கதருணத்தில் வழங்கிய உதவிகள் காரணமாக இலங்கையால் நெருக்கடியைக் கையாள முடிந்தது. இதற்காக இலங்கை என்றும் இந்தியாவுக்கு நன்றிக்கடன்பட்டுள்ளது-என்றார். (எ-இ)

# தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு ம.ம.முன்னணி ஆதரவில்லை

கொழும்பு, ஜூலை 16

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளர் ஒருவரைக் களமிறக்கும் முயற்சிக்கு மலையக மக்கள் முன்னணி ஆதரவு வழங்காது என்று அந்தக் கட்சியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வீ. இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

தமிழ்ப் பொதுவேட்பாளர் ஒருவரைக் களமிறக்கி அவரை வெற்றிபெற வைக்க முடியுமெனில் தமிழ்பேசும் சமூகமாக ஒன்றிணைந்து செயற்படுவதற்குத் தயாராக இருக்கின்றோம். ஆனால் தமிழ்ப் பொதுவேட்பாளர் ஒருவரால் வெற்றிபெறமுடியாது என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம்.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறப்போகும் வேட்பாளர் ஒருவரின் வாக்குகளைக் குறைப்பதற்கான நகர்வாகவே இந்த தமிழ்ப் பொது வேட்பாளர் விடயம் அமைந்துள்ளது என்பது என்னுடைய தனிப்பட்ட கருத்து. அந்தவகையில் தமிழ்ப் பொதுவேட்பாளர் யோசனையை நான் ஆதரிக்கவில்லை. பிரதான வேட்பாளர்களிடம் தமிழர் பிரச்சினை தொடர்பில் பேரம் பேசலாம். அது விடயத்தில் ஒன்றிணைந்து பயணிக்கலாம் - என்றார். (எ-44)

# கொள்கைமுறை பெரமுன தவறாது



## நாமல் கூறுகின்றார்

கொழும்பு, ஜூலை 16

கட்சியின் அடிப்படைக் கொள்கைகளையும், ஒற்றையாட்சியையும் காட்டிக்கொடுப்பதற்குத் தயாரில்லை என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் தேசிய அமைப்பாளரான நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

திவுலபிடிய தொகுதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பெரமுனக் கட்சியின் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பு வெளிவரவுள்ள நிலையிலேயே சிலருக்கு 19 ஆவது திருத்தச்சட்டம் நினைவுக்கு வந்துள்ளது. அரகலயவை முன்னின்று நடத்தியவர்களில் சிலர் அரசியல் கட்சிகளில் இணைந்துள்ளனர். வன்முறை மூலம் அல்ல, ஜனநாயக வழியிலேயே ஆட்சியைப் பிடிக்கமுடியும் என்பதை அவர்கள் உணர்ந்துள்ளமை மகிழ்ச்சியளிக்கின்றது. ஒரு கட்சியாக எந்தவொரு சவாலையும் ஏற்பதற்கு நாம் தயார். கட்சியின் அடிப்படைக்கொள்கையையும், ஒற்றையாட்சியையும் காட்டிக்கொடுக்கக்கூடாது.

ஜனாதிபதித் தேர்தலை அறிவிப்பதற்கான அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குக் கிடைப்பதற்கு இன்னும் சில நாள்களே உள்ள நிலையில்தான் 19 ஆவது திருத்தச்சட்டம் நிறைவேற்றப்பட்ட விதம் தொடர்பில் சிலருக்கு நினைவு வந்துள்ளது. தேர்தல் நெருங்கும் வேளையிலேயே 5 வருடங்களா, 6 வருடங்களா என்ற சிந்தனைகூட சிலருக்கு எழுகின்றது. எது எப்படி இருந்தாலும் தேர்தலைப் பிற்போடுவதற்கு நாம் இடமளிக்க மாட்டோம். அதேவேளை தேசிய வளங்களை நாம் பாதுகாப்போம். அவற்றை மேம்படுத்துவதற்குரிய முதலீடுகள் கொண்டுவரப்படும் - என்றார். (ப-44)

# உயிர்மாய்ப்புகள் நாட்டில் அதிகரிப்பு


கொழும்பு, ஜூலை 16

இலங்கையில் தவறான முடிவெடுத்து உயிர்மாய்த்துக் கொள்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது. தற்கொலை செய்து கொள்ளும் பட்டியலில் இலங்கை இன்னும் முன்னணியில் உள்ளது என்று சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.

உயிர்மாய்ப்புச் சூழ்நிலைகளைக் கண்டறிந்து தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் சுகாதார அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ராஜபக்சக்களை காக்கும் தேவை எதுவும் இல்லை!

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 16**

**ராஜபக்சக்களை பாதுகாக்கவேண்டிய எந்தவொரு தேவைப்பாடும் கிடையாது. ரணசிங்க பிரேமதாஸவுக்கு எதிராக குற்றப் பிரேரணை வந்த போது அவரை மட்டுமே பாதுகாத்துள்ளேன் - இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். கண்டியில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-


கட்சியைவிட தாய்நாடுதான் எமக்கு முக்கியம். தாய் நாட்டை நேசித்துவிட்டுத்தான் நாம் கட்சியை நேசிப்போம். ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்கள் இந்தக் கொள்கையின் அடிப்படையில்தான் செயற்பட்டுள்ளனர். நம்பிக்கையின் அடிப்படையில்தான் சவாலை நான் பொறுப்பேற்றேன். அதற்கு மொட்டுக் கட்சியும் ஆதரவு வழங்கியது. அந்தக் கட்சியின் ஆதரவு இருந்ததால்தான் வேலைத்திட்டங்களை முன்னெடுக்கமுடிந்தது.

மொட்டுக் கட்சியில் இருந்து ஒரு பிரிவினர் பிரிந்து சென்றனர். மஹிந்த பக்கம் பெரும்பான்மை இருந்தது. பீரிஸ் அணியினர் நல்லவர்களாம், ராஜபக்சக்கள் கெட்டவர்களாம். ராஜபக்சக்கள் கெட்டவர்களெனில், பீரிஸ் தரப்பினரும் கெட்டவர்கள்தான்.

எனக்கு ராஜபக்சக்களை பாதுகாக்கவேண்டிய தேவைப்பாடு கிடையாது. ரணசிங்க பிரேமதாஸவை மட்டுமே நான் பாதுகாத்துள்ளேன். கட்சியில் குற்றப் பிரேரணை வந்தபோது அவருக்கு ஆதரவாக நானே முன்னின்றேன். வேறு எவரையும் நான் பாதுகாத்தது கிடையாது. நாட்டைப் பாதுகாக்க முன்வருமாறு ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு அழைப்பு விடுக்கின்றேன். அதேபோல தடை செய்யப்பட்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் அங்கத்துவத்தை சஜித்துக்கு வழங்கத் தயார். நாட்டை கட்டியெழுப்பும் பயணத்தில் இணையவேண்டும் என்று அழைக்கின்றேன்- என்றார். (ஏ-44)

# இப்போது சூளுரைப்பவர்கள் அப்போது பயந்து நடுங்கினர்

## பஸிலுக்கு சூடு வைத்த நிமால்



கடனும் இல்லை, எவருக்கும் பயமும் இல்லை என தற்போது சூளுரைப்பவர்கள், அரகலய காலத்தில் நடுநடுங்கி இருந்தனர். அவர்களுக்கு ஜனாதிபதி ரணிலே உயிர் பாதுகாப்பு வழங்கினார்.

-இவ்வாறு பஸில் ராஜபக்சவுக்குப் பதிலடி கொடுத்துள்ளார் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா. தாங்கள் எவருக்கும் பயமும் இல்லை, கடனும் இல்லை என ஜனாதிபதி முன்னிலையில் பஸில் ராஜபக்ச கருத்து வெளியிட்டிருந்த நிலையிலேயே அதற்கு நிமால் சிறிபால டி சில்வா இவ்வாறு பதிலடி கொடுத்துள்ளார். புதிய கூட்டணியின் 3 ஆவது கூட்டம் பதுளையில் நேற்று நடைபெற்றது. அதில் உரையாற்றிய அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி ரணில் அவருக்கு வழங்கப்பட்ட பொறுப்பை நிறைவேற்றினார். அவரும் நாட்டுக்குக் கடன் இல்லை. எவருக்கும் பயமும் இல்லை. நாமும் அவ்வாறுதான். ஆனால் தற்போது பயமில்லை எனக் கூறுபவர்கள் அரகலய காலத்தில் நடுநடுங்கிக் காணப்பட்டனர். இவர்களுக்கு உயிர் பாதுகாப்பு வழங்கியது ரணில்தான். நாடாளுமன்றத்தையும் அவர்தான் பாதுகாத்தார். துணிவுடன் முடிவுகளை எடுத்தார் - என்றார். (ஏ-44)

# தேர்தல் செலவை அறிவிக்க பணிப்பு

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தாம் தேர்தல் பிரசாரத்துக்கு செலவிடவுள்ள தொகை தொடர்பில் தேர்தல்கள் திணைக்களத்துக்கு அறிவிக்க வேண்டுமென தேர்தல்கள் ஆணையாளர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்கா தெரிவித்துள்ளார். இம்முறை முதல் தடவையாக இந்த விடயம் நடைமுறைக்கு வருகிறது எனவும், 2023 ஆம் ஆண்டின் தேர்தல் செலவுகள் சட்டம் இம்முறை இறுக்கமாக கடைப்பிடிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். வேட்பாளர்கள் தமக்கு வாக்களிப்பவர்களுக்கு பொறுப்புக் கூறுபவர்களாக இருக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஏ-6)

# நாட்டில் அதிகரிக்கும் வீதி விபத்துகள்

வீதி விபத்துகளால் ஏற்படும் உயிரிழப்புகள் நாட்டில் அதிகரித்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் வீதி விபத்துகளில் ஆயிரத்து 154 பேர் உயிரிழந்துள்ளனர். இந்தக் காலகட்டத்தில் மொத்தம் 11 ஆயிரத்து 727 வீதி விபத்துகள் பதிவாகியுள்ளன. சாரதிகளின் தவறான அணுகுமுறையே வீதி விபத்துகளுக்குப் பிரதான காரணம் என வீதி பாதுகாப்புக்கான தேசியசபையின் தலைவர் ரோஹன அஜித் குணரத்ன தெரிவித்துள்ளார். மோசமாகப் பராமரிக்கப்படும் வீதிகள், போதிய பலகைகள் மற்றும் சரியான விளக்குகள் இல்லாததும் பிரச்சினையை மேலும் மோசமாக்குகின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அலைபேசி பயன்பாடு, போதிய ஓட்டுநர் பயிற்சி, பாதசாரிகளின் கவனக் குறைவு, மோசமான வானிலை மற்றும் மோசமான பொதுப் போக்குவரத்து நிர்வாகம் ஆகியவை அதிகரித்து வரும் விபத்து விகிதங்களில் கணிசமான பங்கு வகிக்கிறது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ஏ-இ)



# 'இசற்' புள்ளியின்படி வேலை வாய்ப்புகள்!

வேலை வாய்ப்புகளுக்கு ஆள்களை திரட்டும்போது 'இசற்' புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டுமென மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார். கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் க.பொ.த. உயர்தரச் சித்தியுடன் பொதுத்துறை வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பான தனிநபர் பிரேரணையில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். இந்த நடைமுறையின் மூலம் [illegible] என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஏ-6)

# புதினம் தெரியுமோ?

ஒரு பிள்ளைக்கு ரண்டு தாய்மார் உரிமை கொண்டாடின கதையா, சாவகச்சேரி ஆஸ்பத்திரி விசயம் மாறிப்போட்டுது. டாக்குத்தர் அர்ச்சுனாவை இரவோட இரவா பொலிஸ்காரர் அரஸ்ட் பண்ண வெளிக்கிட்டு, பிறகு சனத்தின்ர எதிர்ப்பால அதைக் கைவிட்டுப்போட்டு, 'கொழும்புக்கு விசாரணைக்கு வரட்டாம்' எண்டு அவரை அனுப்பி வைச்சவை. கொழும்புக்குப் போன டாக்குத்தர் அர்ச்சுனா, அங்க குடுக்குற 'டோஸோட' அடங்கிடுவார், இஞ்சாலிப் பக்கம் தலைவைச்சும் படுக்கமாட்டார் எண்ட நினைப்பில, டாக்குத்தர் ரஜீவை அர்ச்சுனான்ர இடத்துக்கு பதிலா போட்டவை. டாக்குத்தர் ரஜீவின்ர பதவியேற்புக்கு வடக்கு மாகாண சுகாதாரத்துறையில இருக்கிற ரண்டு முக்கியமான, பொறுப்பான ஆக்களும் முன்னுக்கு நிண்டு படத்துக்கெல்லாம் போஸ் குடுத்தவை. 'அர்ச்சுனான்ர தொல்லை, இனிமேல் இஞ்ச இல்லை'எண்ட புளுகம் அவைக்கு. அர்ச்சுனா மெயினாக் குற்றம் சாட்டின ஆக்களில, அந்தப் பெரும் புள்ளிகளில ஒருத்தரும் அடக்கம்.

ஆனால் அவையள் நினைச்சமாதிரி, கொழும்பில அர்ச்சுனாவுக்கு 'லொக்'போடமுடியேலை. அதைவிடப் பகிடி என்னெண்டால், கலியாணத்தை நிப்பாட்ட சீப்பை ஒளிச்சுவைச்ச கதையா, சாவகச்சேரி ஆஸ்பத்திரியில இருந்த பொறுப்பதிகாரிமார் சைன் வைக்கிற கொப்பியையும் அர்ச்சுனா போகேக்க கொண்டுபோட்டார். அப்பதான் புதிசா ஆரும் பதவிக்கு வந்தாலும் அது செல்லுபடியாகாமல் போடும் எண்டது அவரின்ர பிளான். ஆனால் ஆனைக்கே அடி சறுக்கேக்க அர்ச்சுனாவுக்கு மட்டும் சறுக்காதோ? அதுவும் வடக்கு மாகாண சுகாதாரத்துறையின்ர மேலிடத்தில இருக்கிறவை ஒரு கொப்பியை அர்ச்சுனா கொண்டு போனால், அதுக்குப் பதிலா ஆயிரம் கொப்பியை வைக்கக் கூடியவை. இஞ்சாலிப்பக்கம் அர்ச்சுனா வந்தாலும் அவரை டம்மியாக்கிற வேலை நடந்துகொண்டிருக்க, அங்காலிப் பக்கம் அர்ச்சுனா பேஸ்புக் லைவ், ரீ விப்பேட்டியள் எண்டு இந்த விசயத்தை இன்னும் சூடாக்கிக் கொண்டிருந்தார். கடைசியா 'திங்களோட என்ர லீவு முடியுது. அண்டைக்கு சாவகச்சேரிக்குப் போவன்' எண்டு அர்ச்சுனா சொன்னதும், விசயம் இன்னும் பத்தியெரியத் தொடங்கிட்டுது. போன முறை மாதிரி சனங்கள் ஆயிரக் கணக்கில றோட்டுக்கு வந்தால், பிறகு ஒண்டும் செய்ய ஏலாமல் போடுமெல்லோ. அதால அர்ச்சுனாவுக்கு சப்போர்ட்டா போனகிழமை போராட்டடம் செய்யிறதில முன்னுக்கு நிண்ட சிலரை, முந்தநாள் இரவு சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு கூப்பிட்டு கதைச்சிருக்கினம். 'இப்ப எல்லாம் சுமுகமா இருக்குது. ஜெனரேட்டரும் வந்திட்டு. அதைமாதிரி மிச்ச வளமும் வந்திடும். பெரியாஸ்பத்திரி மாதிரி இதை மாத்துவம். ஆனால் நீங்கள் குழப்பக்கூடாது' எண்டு சொல்லி அவையின்ர மண்டையைக் கழுவியிருக்கினம். அதால நேற்று கனபேர் வரேலை. எண்டாலும் கூட்டத்துக்கு குறைவேயில்லை.

டாக்குத்தர் அர்ச்சுனா திங்கட்கிழமை சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு வரப்போறார் எண்டு, முந்தநாளே எல்லாருக்கும் தெரியும். வடக்கு மாகாணத்தில சுகாதாரத் துறையில மேல்மட்டக் கதிரையை பெஞ்சன் எடுத்தபிறகும் தேய்ச்சுக் கொண்டிருக்கிறவைக்கும் நல்லாவே தெரியும். அவைதானே அர்ச்சுனா எப்ப போவார், இன்னொருத்தரை எப்ப அதில இருத்தலாம் எண்டு வேலை செய்தவை. அப்பிடி அர்ச்சுனா இல்லாத நேரத்தில நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு, சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு வந்தவை, நேற்று அர்ச்சுனா வரேக்க 'உமக்கு இப்ப இஞ்ச பொறுப்பில்லை, ரஜீவைப் போட்டிட்டம்' எண்டு சொல்லத் தெரியாதோ? அப்பிடி சொல்லியிருந்தால், டாக்குத்தர் ரஜீவை கதிரையில இருந்து எழுப்பிப் போட்டு, அந்தக் கதிரையில அர்ச்சுனா காலுக்கு மேல கால் போட்டுக்கொண்டு இருந்திருக்கேலாதே. அர்ச்சுனாவைப் பழிவாங்க நினைச்சு, இன்னொரு டாக்குத்தரை பலிக்கடாவாக்கிப் போட்டு, மேல்மட்டங்கள் குளிர்காயினம் போல.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வலயமட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் யாழ். சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி ஆண்கள் அணிகள் 16 வயதுப் பிரிவு மற்றும் 18 வயதுப் பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டன. (25-63)

# சிறப்பு அபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூலை 16

சுன்னாகம், தாளையம்பதி ஸ்ரீ அரிகரபுத்திர ஐயனார் ஆலய வருடாந்த கும்பாபிஷேக தினத்தை முன்னிட்டு இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் சிறப்பு அபிஷேகம், பூசை ஆரம்பமாகி நடைபெறும்.

அதைத் தொடர்ந்து அடியவர்களுக்கு அன்ன தானம் வழங்கப்படும் என்று ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (எ-66)

# ஆடிப்பிறப்பு விழாவும் நினைவரங்கமும்

யாழ்ப்பாணம், ஜூலை 16

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் நடத்தும் ஆடிப் பிறப்பு விழாவும் நவாலியூர் சோமசுந்தரப் புலவர் நினைவரங்கமும் நாளை புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் நவாலி மகா வித்தியாலயத்தில் யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் தி.வேல்நம்பி தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பாடசாலை அதிபர் கி.கிருஷ்ணானந்தா வாழ்த்துரையையும், கிராம அலுவலர் ஜீவா சஜீவன் தொடக்கவுரையையும் வழங்குவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர் செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம் ஆடிப்பிறப்பும் நவாலியூர் சோமசுந்தரப் புலவரும் எனும் பொருளில் சிறப்புரை ஆற்றுவர். பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-66)

# வெள்ளோட்டவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 16

வரலாற்றுச் சிறப்பு மிக்க மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தின் புதிய திருக்கைலாச வாகன வெள்ளோட்ட விழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் இடம்பெறவுள்ளது. (எ-66)

# சிறப்புச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூலை 16

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவ நெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் வாராந்தத் திருவாசகச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர்-14 சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயப் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

மாணிக்கவாசக சுவாமிகள் குரு வணக்கத்தைத் தொடர்ந்து சைவப்புலவர், பிரசங்க பூஷணம் செ. த. குமரன் 'மாணிக்கவாசகரும் திருவுந்தியும்' என்னும் விடயப்பொருளில் சொற்பொழிவாற்றவுள்ளார்.

சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

+++

யாழ்ப்பாணம், ஜூலை 16

யாழ்ப்பாணம், நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரச் சிறப்புச் சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்களின் ஆசியுரையைத் தொடர்ந்து தலைமையுரையை பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதனும், சைவப்புலவர், பிரசங்க பூஷணம் பொன். சந்திரவேல் ' கருடபுராணம் கூறும் நல்வினையும் தீவினையும்'என்னும் விடயப்பொருளில் சிறப்புச்சொற்பொழிவாற்றவுள்ளார். சொற்பொழிவில் இருந்து அறநெறிப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். நண்பர்களால் ஆதாயம் கிடைக்கக்கூடும். வாழ்க்கைத்துணை வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**இடபம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். சகோதரர்கள் ஆலோசனை கேட்டு வருவார்கள். தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். முயற்சிகள் சாதகமாக முடியும். செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்துவிட முடியும்.

**மிதுனம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் பெரியவர்களின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை. விட்டுப் பிடிப்பது நல்லது.

**கடகம்:** அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். தாய்வழியில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணையுடன் அனுசரித்துச் செல்லவும். உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது.

**சிம்மம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டிய நாள். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். சிலருக்கு மற்றவர்களுடன் மனவருத்தம் ஏற்படும்.

**கன்னி:** வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். சகோதர வகையில் எதிர்பார்த்த உதவி கிடைப்பது தாமதமாகும். கொடுத்த கடன் திரும்பக் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

**துலாம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. வாழ்க்கைத் துணையின் ஆலோசனை பயனுள்ளதாக அமையும்.

**விருச்சிகம் :** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். பிள்ளைகளின் பிடிவாதப் போக்கு வருத்தம் தரும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களால் சில சங்கடங்கள் ஏற்படும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**தனுசு:** மகிழ்ச்சி தரும் நாள். வாழ்க்கைத் துணையுடன் ஏற்பட்டிருந்த மன வருத்தம் நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும். தந்தைவழி உறவினர்களால் வீண் செலவுகள் ஏற்படும்.

**மகரம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். சகோதரர்கள் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் ஏற்பட்ட பிரச்சினைகள் நீங்கும்.

**கும்பம்:** நீண்ட நாள்களாக எதிர்பார்த்து ஏமாந்த பணம் இன்று கைக்கு வந்து மகிழ்ச்சி தரும். சிலருக்கு தந்தையுடன் மனக்கசப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளதால் அவருடன் அனுசரணையாக நடந்துகொள்ள முயற்சி செய்யவும்.

**மீனம்:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். வாழ்க்கைத்துணையுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. தாயின் தேவையை நிறைவேற்ற சிறிது அலையவேண்டியிருக்கும். மற்றவர்களுடன் வீண் சர்ச்சைகளில் ஈடுபடவேண்டாம்.

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் 'தேசிய கலை இலக்கிய விழா - 2024' இன் பிரதேச மட்டத் தமிழ் மற்றும் ஆங்கிலமொழி மூலக் கையெழுத்துப் பிரதிப் போட்டி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையில் நடைபெற்றது. (எ-66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வெற்றிக்கான நகர்வல்ல, நீதிக்கான போராட்டம்!

ஸ்ரீலங்கா ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிப்பதில்லை என்று அறிவித்திருக்கின்றது மலையக மக்கள் முன்னணி. ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளர் ஒருவரைக் களமிறக்கி அவர் வெற்றிபெறுவார் என்றால், அந்த முயற்சி பயன்மிக்கது என்றும், அவ்வாறல்லாத காரணத்தால் பிரதான வேட்பாளருடன் பேரம்பேசலை மேற்கொள்வதே உசிதம் என்றும் மலையக மக்கள் முன்னணியின் முக்கியஸ்தரான வீ.இராதாகிருஷ்ணன் தெரிவித்திருக்கின்றார். ஒரு விடயத்தை மலையக மக்கள் முன்னணியினரும், இராதாகிருஷ்ணனும் தெரிந்து கொள்ளவேண்டும். தமிழ்ப் பொதுவேட்பாளரைக் களமிறக்குவதற்கு மேற்கொள்ளப்பட்டிருக்கும் முயற்சி ஸ்ரீலங்கா ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் ஒருவரை அரியணை ஏற்றுவதற்காக அல்ல. இது பள்ளிக் குழந்தைகளுக்கே தெரிந்தவிடயம். அவ்வாறிருந்தும் தமிழ்ப் பொதுவேட்பாளர் என்ற முயற்சி ஏன் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்றால், தேசியக் கட்சியின் வேட்பாளர்களையோ அல்லது சிங்களத் தலைமைகளையோ தமிழினம் நம்பத்தயாரில்லை. சிங்களத் தலைவர்களால் இதுவரையும் தமிழ் மக்கள் தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டு வந்ததால், தம்மைத் தாமே ஆட்சி செய்கின்ற சமஷ்டி அடிப்படையிலான தீர்வுதான் தமிழர்களுக்குத் தேவை என்ற கருத்தூட்டத்தைத் திணிப்பதற்காகவே.

தமிழ்ப் பொதுவேட்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டு, அவருக்கு சிறுபான்மைச் சமூகத்தின் வாக்குகள் திரட்டப்படும் பட்சத்தில் அது ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் நிகழ்காலச் செல்நெறியைத் தோலுரித்துக் காட்டும். இவ்வாறிருக்கையில், அதிகாரக் கதிரையைக் கைப்பற்றுவதற்காகவே இந்தத் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளர் ஒருவர் களமிறக்கப்படுவதாகக் கருத்துவெளியிடுவதானது அபத்தம். அதிலும், பேரம் பேசல் என்பது தமிழர்களுக்குப் புதிதல்ல. தலைமுறை தலைமுறையாகக் கேட்டுக் கேட்டுப் புளித்துப் போன வார்த்தைகள் அவை. ஸ்ரீலங்கா ஜனாதிபதித் தேர்தலில் இதுவரை அடையாளப்படுத்தப்பட்டுள்ள பிரதான வேட்பாளர்களான ரணில், சஜித், அனுர ஆகியோர் இதற்கு முன்னர் ஏதோவொரு வகையில் முன்னைய அரசாங்கங்களில் அங்கம் வகித்தவர்களே. அவர்கள் அரசியலுக்குப் புதிய முகங்கள் அல்லர்.

கடந்த வருடம் சுதந்திர தினத்துக்கு முன்னர், இனப்பிரச்சினையைத் தீர்ப்பேன் என்று புறப்பட்ட ஜனாதிபதி ரணிலால் இப்போதுவரை எதைச் சாதிக்க முடிந்தது? எதிர்க்கட்சித் தலைவர் சஜித், ரணிலின் முகாமில் அதாவது ஐக்கிய தேசியக் கட்சியில் சங்கமித்திருந்த காலங்களில் அரசாங்கத்தின் பெரும்புள்ளியாக இருந்தார், இனவாதத்தைத் தீர்க்க அவரால் மேற்கொள்ளப்பட்ட நகர்வுதான் என்ன? அநுரகுமார, மஹிந்த ராஜபக்சவின் அரசாங்கத்துக்கு முன்னொரு தடவை ஆதரவு வழங்கியவர். அல்லாமலும், வடக்கு - கிழக்குப் பிரிக்கப்படுவதற்கான பிரதான காரணமும் அவரே. இவ்வாறானவர்களிடம் பேரம் பேசல் என்று எதைத்தான் செய்யமுடியும்? மலையக மக்கள் முன்னணியினர், தமிழ்க் கட்சியாக இருந்தாலும் அவர்களுடைய சிந்தனைத்தளம் வேறு, பிரச்சினைகள் வேறு, கொள்கைகள் வேறு என்பதைத்தான் இராதாகிருஷ்ணனின் கருத்துகள் கட்டியம் செய்கின்றன. தமிழர்களின் முயற்சி தொடர்பான தம்நிலைப்பாட்டை அவர்கள் பதிவுசெய்ய வேண்டுமாயின், தமிழர்களின் தளத்தில் இருந்து சிந்திப்பதுதான் அழகும் ஆரோக்கியமும். 70 ஆண்டுகால இனப்பிரச்சினைக்கும், 30 ஆண்டுகால குருதிச் சகதிக்கும் சாட்சியமான சமூகத்தின் நகர்வே இது. தமிழினத்தின் மீது கட்டவிழ்க்கப்பட்ட அத்தனை கொடுமைகளுக்கும் நீதி கேட்கும் போராட்டத்தின் ஆகப்பிந்தியதொரு முயற்சியே இந்த தமிழ்ப்பொதுவேட்பாளர் என்ற எண்ணக்கரு. இந்த உண்மையைப் புரிந்துகொண்டால் மலையக மக்கள் முன்னணியும் பொது வேட்பாளரை ஆதரிக்கும் முடிவை எடுக்கக்கூடும்.



# வேட்புமனுக்கள் கோரும் திகதி மாத இறுதியில் வெளியாகும்!

## தேர்தல்கள் ஆணைக்குழு தகவல்

**கொழும்பு, ஜூலை 16**

**ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுக்களைக் கோரும் திகதியை இந்த மாத இறுதியில் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிக்கும் என ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுக்களை கோரும் திகதியை அரசமைப்பின் பிரகாரம் அறிவிக்க தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு நாளை அதிகாரம் கிடைக்கும் எனவும் அவர் தெரிவித்தார். இந்த மாத இறுதியில் வேட்புமனுத் தாக்கல் செய்யும் திகதியை அறிவிப்பதன் மூலம் ஜனாதிபதித் தேர்தலுக்குத் தயாராவதற்கு தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு போதிய அவகாசம் கிடைக்கும்.

எதிர்வரும் நாள்களில் ஜனாதிபதித் தேர்தலில் பயன்படுத்தக்கூடிய வாக்காளர் பட்டியலை தேர்தல்கள் ஆணைக்குழு உறுதிப்படுத்தவுள்ளது. இந்த வருடத்தின் முதல் காலாண்டில் புதுப்பிக்கப்பட்ட வாக்காளர் பட்டியலின்படி 17 மில்லியன் மக்கள் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெறுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ-இ)

## நட்டஈட்டைச் செலுத்துவதற்கு அவகாசம் கோரும் மைத்திரி

கொழும்பு, ஜூலை 16



உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்குமாறு உயர் நீதிமன்றால் விதிக்கப்பட்ட 100 மில்லியன் ரூபாவில் 58 மில்லியன் ரூபா செலுத்தப்பட்டுள்ளது என்றும், மீதிப் பணத்தை செலுத்தி முடிக்க கால அவகாசம் வழங்கவேண்டும் என்றும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உயர் நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார். மீதிப் பணத்தை செலுத்தி முடிக்க 6 வருடகால அவகாசம் வழங்கவேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது சட்டத்தரணி மூலம் உயர் நீதிமன்றத்துக்குக் கோரிக்கை விடுத்துள்ளார். (ஏ-இ)

## ரயில் சேவைகள் பாதிப்பு

கொழும்பு கோட்டையில் இருந்து பதுளை நோக்கி பயணித்த ரயில் பண்டாரவளை மற்றும் ஹீல் ஓயாவுக்கு இடையே தடம்புரண்டுள்ளது. இந்த விபத்தால் மலையகத்துக்கான ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டன என்று ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஏ-இ)

## தேர்தல் ஒத்திவைப்பு; ஐ.ம.சக்தி மனு தாக்கல்

கொழும்பு, ஜூலை 16

ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்கும் மனுவைத் தள்ளுபடி செய்யக்கோரி ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா உயர் நீதிமன்றத்தில் இடைக்கால மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார். நிஷான் சிட்னி பிரமித்திரத்ன, கமிது கருணாசேன, ஷெனாலி டயஸ், நிமாஷி பெர்னாண்டோ உள்ளிட்ட சட்டத்தரணிகள் குழுவினர் இந்த மனு சார்பாக முன்னிலையாகவுள்ளனர். (ஏ-இ)

## அதிகரிக்கும் டெங்கு

கொழும்பு, ஜூலை 16



இந்த ஆண்டு 30 ஆயிரத்துக்கும் அதிகமான டெங்குத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்று தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது. நாடளாவிய ரீதியில் இந்த ஆண்டு டெங்குத் தொற்றால் 12 உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன என்றும், இதுவரை 30 ஆயிரத்து 227 பேர் டெங்குத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கொழும்பு மாவட்டத்திலேயே அதிகளவில் டெங்குத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் 21 சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகள் டெங்கு அபாய வலயங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. (ஏ-இ)

### நாளை

17.07.2024

புதன்கிழமை - ஆடி - 01

ஆடிப்பிறப்பு

சுபநேரம் : 04.30 - 06.00

ராகுகாலம் : 12.00 - 01.30

### நாளொரு நல்வார்த்தை

வாழ்க்கையில் நாம் முன்னேற முன்னேறத்தான் நம் திறமைகளின் வரம்புகளைத் தெரிந்து கொள்கிறோம்.

- பிராய்ட் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவமயமாக்கலை நியாயப்படுத்தவா 'யுக்திய'?

## சட்டத்தரணி அம்பிகா கேள்வி



**கொழும்பு, ஜுலை 16**

**நாட்டில் திட்டமிடப்பட்ட இராணுவமயமாக்கலை சட்ட பூர்வமாக முன்னெடுக்கவே 'யுக்திய' நடவடிக்கை ஒரு திட்டமாகக் கையாளப்படுகிறது. 'யுக்திய' நடவடிக்கை மற்றும் அதன்போது பின்பற்றப்படும் உத்திகளின் பின்னணியிலுள்ள உண்மையான நோக்கம் தொடர்பில் பல்வேறு சந்தேகங்களைத் தோற்றுவித்துள்ளது.**

-இவ்வாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில், குறிப்பாக கடந்த சில ஆண்டுகளாக சட்டம் மற்றும் கொள்கை உருவாக்கத்தில் இராணுவமயமாக்கலை சட்டபூர்வமாக்குவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது.

அந்தவகையில் போதைப்பொருளுக்கு எதிரான 'யுக்திய' நடவடிக்கையும் இராணுவமயமாக்கலுக்கு வாய்ப்பளிப்பதற்கும், அதனை நியாயப்படுத்துவதற்குமான ஒரு திட்டமாகவே அமைகிறது.

'யுக்திய' நடவடிக்கை மற்றும் அதன்போது பின்பற்றப்படும் உத்திகளின் பின்னணியிலுள்ள உண்மையான நோக்கம் தொடர்பில் பல்வேறு சந்தேகங்களைத் தோற்றுவித்துள்ளன.

அது சட்டவாட்சியையும், உரிமைகளின் பாதுகாப்பையும் முற்றிலும் சீர்குலைப்பதாக அமையும் - என்றார். (ச-இ)

# 2028ஆம் ஆண்டு வரையில் காத்திருக்கும் நோயாளர்கள்

கொழும்பு, ஜுலை 16

காலி - கராப்பிட்டிய போதனா மருத்துவமனையின் இருதய சத்திரசிகிச்சை மற்றும் தொராசி சத்திர சிகிச்சைப் பிரிவில் இருதய சிகிச்சை செய்ய வேண்டிய நோயாளர்களின் காத்திருப்புப் பட்டியல் 2028ஆம் ஆண்டு வரையில் நீண்டுள்ளது என்று அந்தப் பிரிவின் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் பிரிவில் புதிதாக பதிவுசெய்யப்பட்ட இதய நோயாளிக்கு இதய அறுவைச் சிகிச்சை செய்ய 2028ஆம் ஆண்டு வரை காத்திருக்கவேண்டியுள்ளது என்று இதய நோயாளிகள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பிரிவில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் இதயம் மற்றும் மார்புக் குழி தொடர்பான சிறப்பு மருத்துவர் நாமல் கமகேவுடன் இணைந்து இதயம் மற்றும் தொராசி குழிகளில் நிபுணத்துவம் பெற்ற மூன்று சத்திரசிகிச்சை நிபுணர்கள் பணியாற்றி வருகின்றனர். மருத்துவர்கள் பற்றாக்குறையால் இந்த நிலைமை நீடிக்கின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)



## மொழிபெயர்ப்பாளராக சுமெக்ஸ்சன் நியமனம்

யாழ்ப்பாணம், ஜுலை 16

இலங்கை முழுவதுக்குமான அரச கரும மொழி பெயர்ப்பாளராக (ஆங்கிலம், தமிழ்) மயில்வாகனம் சுமெக்ஸ்சன், மல்லாகம் நீதிமன்ற நீதிவான் பி. சிவகுமார் முன்னிலையில் கடந்த வியாழக்கிழமை சத்தியப்பிரமாணம் செய்து கடமையை பொறுப்பேற்றுக்கொண்டார். (ச-22-20)



## 74 வயது முதியவர் தடைதாண்டலில் சாதனை

கொழும்பு, ஜுலை 16

அகில இலங்கை இந்து இளையோர் முதியோர் நலன்புரிமன்றம் ஏற்பாடு செய்த 37 ஆவது வருடாந்த போட்டி, டியகமவில் மஹிந்த ராஜபக்ச விளையாட்டரங்கில் கடந்த மே மாதம் 15 ஆம், 16 ஆம் திகதிகளில் நடைபெற்றது.

இதில் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி பழைய மாணவரும் யோகா ஆசிரியரும் அகில இலங்கை இந்து இளையோர் முதியோர் நலன்புரி மன்றத் தலைவருமாகிய 74 வயதையுடைய த. வேலாயுதப்பிள்ளை 300 மீற்றர் தடைதாண்டல் போட்டியிலும் 3 ஆயிரம் மீற்றர் நடைப்போட்டியிலும் பங்கு பற்றி 3 ஆம் இடத்தைப்பெற்று வெள்ளிப்பதக்கங்களை வென்றுள்ளார்.

மேலும் மே மாதம் 25 ஆம், 26 ஆம் திகதிகளில் கொழும்பில் இடம்பெற்ற 10 ஆவது வருட சம்பியன் போட்டியிலும் 3 ஆயிரம் மீற்றர் ஓட்டப்போட்டியில் 3 ஆம் இடத்தையும், 80 மீற்றர் தடைதாண்டல் போட்டியில் 1 ஆம் இடத்தையும் பெற்று பதக்கங்களைப் பெற்றார். (ப)

## பணமோசடிகள் சிக்கும் மக்கள்


யாழ்ப்பாணம், ஜுலை 16

இலங்கையில் நிதி மோசடிக் குற்றங்களில் சிக்கி ஏமாறுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது என்று இலங்கை கணினி அவசர பதிலளிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

அரசாங்க நிறுவனங்களின் பேரில் நிதி மோசடி முயற்சிகள் இப்போது அதிகரித்துள்ளன.

இவ்வகையான மோசடிகள் அரசாங்க நிறுவனங்களின் முத்திரையைக் கொண்ட மின்னஞ்சல்கள் மூலம் இடம்பெறுவதாகவும் பெறுநர்களை கட்டாயமாக பணம் செலுத்தும்படி அவை அறிவுறுத்துவதாகவும் தெரியவருகின்றது.

அதேவேளை கடந்த ஐந்து மாதங்களில் மட்டும் சமூக வலைத்தளங்கள் தொடர்பாக 7,900 முறைப்பாடுகளும் நிதி மோசடி தொடர்பாக 1,830 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)



## பொலிஸாருக்கு 'அலேர்ட்'

கொழும்பு, ஜுலை 16

கைதுசெய்யப்படும் சந்தேகநபர்களை ஊடகங்களுக்கு வெளிப்படுத்தி விசாரணைகளை மேற்கொள்ளவேண்டாம் எனவும் இதனால் விசாரணைகளுக்கு இடையூறு ஏற்படும் என்றும் பொலிஸ்மா அதிபரினால் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அத்துருகிரிய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரின் வாக்கு மூலம் ஊடகங்களுக்கு வெளிப்படுத்தப் பட்டுள்ளது.

இதுதொடர்பாக விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸ் ஆணைக்குழு பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளது.

அதற்கமைய பொலிஸ் விசேட விசாரணை பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் எனவும் பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ச-இ)

நீர்வேலி பாலர் பகல் விடுதியும் முன்பள்ளியும் இணைந்து நடத்திய சிறார்களின் வருடாந்த விளையாட்டு விழா கடந்த சனிக்கிழமை நீர்வேலி ஸ்ரீசுப்பிரமணிய சனசமூக நிலைய முன்றலில் இடம்பெற்றது. நிகழ்வில் வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தைத் திணைக்களத்தின் ஆணையாளர் திருமதி. சுஜீவா சிவதாஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். (ச-66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதித்துறையில் முன்னோடியாக விளங்கும் Mercantile Investments and Finance PLC

**2024 ஜூன் 14 அன்று கொழும்பில் உள்ள JAIC ஹில்டன் ஹோட்டலில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தனது 60ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடியது Mercantile Investments and Finance PLC. புதுமையான புதிய அளவிலான நிதித் தயாரிப்புகளின் துவக்கம், கண்டுபிடிப்பு மற்றும் வளர்ச்சிக்கான நிறுவனத்தின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பை இது அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.**



மாநாட்டில், நிர்வாக பணிப்பாளர் ஜெரார்ட் ஒண்டாட்ஜி, , நிதிப் பணிப்பாளர் (நிர்வாகம்) ஷெர்மல் ஜயசூரிய, பணிப்பாளர் திருமதி. ஏஞ்சலின் ஒண்டாட்ஜி, பணிப்பாளர் ட்ரேவிஸ் ஜே. ஒண்டாட்ஜி, பிரதம செயற்பாட்டு அதிகாரி லக்ஸந்த குணவர்தன, தலைமை நிதி அதிகாரி/ பணிப்பாளர் (நிர்வாகம் அல்லாத) தேவா அந்தனி சிறப்பு விருந்தினர்கள் மற்றும் பங்குதாரர்கள் கலந்து கொண்டனர்.

செய்தியாளர் சந்திப்பின் போது மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் ஒரு சிறப்பு முத்திரையை வெளியிட்டது. இந்த முத்திரையானது கம்பனியின் செழுமையான பாரம்பரியத்தை மட்டுமன்றி கடந்த ஆறு தசாப்தங்களாக இலங்கையின் நிதியத் துறையில் அதன் குறிப்பிடத்தக்க பங்களிப்பையும் அடையாளப்படுத்துகிறது.



நிதித் தீர்வுகளில் முன்னோடியாக விளங்கும் அதன் பாரம்பரியத்தைத் தொடர்ந்து, மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அதன் வாடிக்கையாளர்களின் மாறுபட்ட மற்றும் வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்ய வடிவமைக்கப்பட்ட புதுமையான நிதி தயாரிப்புகளின் புதிய தொகுப்பை அறிமுகப்படுத்தியது. புதிய தயாரிப்பு வரிசையில் சிறப்பு குத்தகை, தங்கக் கடன்கள், சேமிப்புகள் மற்றும் நிலையான நிதியுதவியை ஊக்குவிக்கும் பசுமை முயற்சிகள் ஆகியவை அடங்கும்.

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட குத்தகை விருப்பங்கள் "லீஸ் டிராஃப்ட், பொதுவான குத்தகைத் தேவைகளுக்கான போட்டி விதிமுறைகள் மற்றும் அணுகக்கூடிய குத்தகை தீர்வுகளுடன் பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் "எம்பவர் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. பாதுகாப்பான மற்றும் வசதியான கடன் தீர்வுகளை நாடுபவர்களுக்கு, "ரன் சீட்டு தங்கக் கடன் மதிப்பை மேம்படுத்துகிறது.

சிறுவயதிலிருந்தே தங்கத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து, "பொடித்தோ கிட்ஸ் சேமிப்புத்திட்டம், குழந்தைகளிடம் சேமிப்புப் பழக்கத்தை ஏற்படுத்துவதையும், அவர்களின் நிதி எதிர்காலத்தை உறுதி செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது பசுமை முன்முயற்சிகள், மின்சார வாகனங்களுக்கான நிதி ஆர்வங்கள், சூரிய ஆற்றல் திட்டங்கள் மற்றும் 'கோவி தின்யா' ஆகியவை நிலையான விவசாய நடைமுறைகளை ஆதரிக்கும் திட்டங்களாகும்..

ஜூன் 15, 1964 இல் ஸ்தாபிக்கப்பட்ட Mercantile Investments and Finance PLC இலங்கையின் முதன்மையான நிதி நிறுவனமாக வளர்ந்துள்ளது. சிறந்து விளங்குதல், கண்டுபிடிப்பு மற்றும் வைப்பாளர் நம்பிக்கை ஆகியவற்றிற்கான அதன் அர்ப்பணிப்புக்காக புகழ்பெற்ற நிறுவனம், நிதி தயாரிப்புகள் மற்றும் சேவைகளின் வலுவான வரிசையைக் கொண்டுள்ளது.

ஆறு தசாப்தங்களாக, மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் நிறுவனம் விரிவான நிதித் தீர்வுகளை வழங்குவதிலும், நம்பிக்கை மற்றும் நம்பகத்தன்மையின் பாரம்பரியத்தை உருவாக்குவதிலும் தொழில்துறையை வழி நடத்தி வருகிறது. கூடுதலாக, கிராண்ட் ஹோட்டல் நுவரெலியா, நிலாவெளி பீச் ஹோட்டல், டேஞ்சரின் பீச் ஹோட்டல் ரோயல் பாம் பீச் ஹோட்டல், ஃபேர்வியூ ஹோட்டல் மற்றும் மெர்க்கன்டைல் ஹோட்டல் உட்பட நாடு முழுவதும் வலுவான ஹோட்டல்சங்கிலியை உள்ளடக்கிய நீண்டகாலமாக நிறுவப்பட்ட பல்வகைப்பட்ட நிறுவனங்களின் குழுவின் ஒரு பகுதியாக மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட் உள்ளது. ஃபார்ச்சூன்ஸ் பிரைவேட் லிமிடெட், நாட்டில் மர அடிப்படையிலான மற்றும் பளிங்கு அடிப்படையிலான தரை தயாரிப்பு வரிசையைவழங்குவதிலும் நிறுவுவதிலும் புகழ்பெற்ற வர்த்தக நாமமாகும்.

Mercantile Investments தனது அடுத்த கட்ட வளர்ச்சியில் இறங்கியுள்ள நிலையில், இலங்கையில் நிலையான நிதி உள்ளடக்கம் மற்றும் பொருளாதார அபிவிருத்தியின் போது வைப்பாளர் நம்பிக்கை மற்றும் ஆர்வத்தை நிலைநிறுத்தும் நோக்கத்தில் நிறுவனம் உறுதியாக உள்ளது.

## சமய அறிவுப் போட்டி பரிசளிப்பு விழா

திருநெல்வேலி தலங்காவற்பிள்ளையார் கோவில் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு சமய அறிவுப்போட்டியும், பரிசளிப்பும் ஆலய முன்றலில் அண்மையில் இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கனும், சிறப்பு விருந்தினர்களாக தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன், ஆனைப்பந்தி அமெரிக்கன் மிசன் பாடசாலை அதிபர் யோ. ஜெகஆனந்தம், ஆலயப் பிரதமகுரு விக்னராஜா சர்மா, மஹோற்சவகுரு ஞானானந்தக்குருக்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

தரம் - 3 தொடக்கம் 11 வரை கல்வி பயிலுகின்ற 215 மாணவர்கள் எழுத்துமூலப் பரீட்சையில் தோற்றியிருந்தார்கள்.. இவர்களில் 152 பேர் பரிசுக்குரியவர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

கல்வியங்காடு இந்து தமிழ்க்கலவன் பாடசாலையில் தரம் - 3 இல் பயிலும் மாணவி செல்வி. தீபிகா விஜே தங்கப்பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார்.

இந்தப் பதக்கம் ஆண்டுதோறும் அமரர் சி. பொன்னுத்துரை, அமரர் பொ. தங்கமாணிக்கம் ஆகியோர் ஞாபகார்த்தமாக வழங்கப்பட்டு வருகின்றது. (எ-25-27)



## குளங்கள் சீரமைப்பு பணிகள் விரைவில்!



முல்லைத்தீவு, ஜூலை 16

வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளர் பிரிவின் நான்கு குளங்கள் புனரமைக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஐயன்கன்குளம், பழையமுறிகண்டிகுளம், கோட்டை கட்டியகுளம், அம்பலப்பெருமாள்குளம் என்பன சியாப் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படவுள்ளன. இக்குளங்களைப் புனரமைப்பதற்கு தலா 60 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. 2010 ஆம் ஆண்டில் இருந்து தொடர்ச்சியாக, இக்குளங்களின் கீழான விவசாயிகள் மேற்படி குளங்களைப் புனரமைக்கு மாறு கோரிக்கை விடுத்துவந்தனர்.

இந்நிலையில் நீர்ப்பாசனத் திணைக்களத்துக்கு தற்போது கிடைத்துள்ள நிதியினைக் கொண்டு குளங்களை முழுமையாக புனரமைக்க முடியும் என நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகளால் தெரிவிக்கப்படுகின்றது. (ப-13)



## தேசிய மட்ட தடகளப்போட்டி முல்லை. மாணவன் சாதனை!

முல்லைத்தீவு, ஜூலை 16

வருடாந்த அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான கனிஷ்ர மெய்வல்லுநர் தடகளப்போட்டியின் 3 ஆயிரம் மீற்றர் நீண்டதூர ஓட்டத்தில் முல்லைத்தீவு மாவட்ட முத்தையன் கட்டு இடதுகரை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையைச் சேர்ந்த ஜெ.விதுஷன் முதல் இடம்பெற்றுள்ளார். 9 நிமிடம் 2 செக்கன் 10 வினாடிகளில் 3 ஆயிரம் மீற்றர் தூரத்தை ஓடி முடித்து சாதனை படைத்துள்ளார். இவருக்கான பயிற்சிகளை மேற்படி பாடசாலையின் பயிற்சி ஆசிரியர் பு.ஜனன்தன் வழங்கியிருந்தார். (எ-25-19)

## கதிர்காம பாதயாத்திரை இலவச மருத்துவ முகாம்

கதிர்காம பாதயாத்திரிகர்களின் நலன்கருதி கிழக்கு மாகாண சுகாதார சுதேச மருத்துவ அமைச்சு, கிழக்கு மாகாண சுதேச மருத்துவத்திணைக்களம் மற்றும் கல்முனை, அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைகள் இணைந்து நடத்திய இலவச மருத்துவ முகாமில் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது என்று கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.



உகந்தை மற்றும் குமண போன்ற இடங்களில் கடந்த வாரம் மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டன. இதன் போது ஆயுர்வேத மருந்துகள் வழங்கி வைக்கப்பட்டன (எ-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறார்களின் மெய்வன்மை

யாழ்ப்பாணம், ஜுலை 16
அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம், சரஸ்வதி மத்திய நூல் நிலையம் இணைந்து நடத்தும் முன்பள்ளிச் சிறார்களின் மெய்வன்மைத் திறனாய்வுப் போட்டி நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நிலைய மைதானத்தில் நிலையத் தலைவர் சிவசுப்பிரமணியம் ஆறுமுகதாசன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (ம-66)

# அராலியில் ஆடிப்பிறப்பு

யாழ்ப்பாணம், ஜுலை 16
தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் குலனையூர் கலைவாணி சனசமூக நிலையத்துடன் இணைந்து நடத்தும் ஆடிப்பிறப்பு விழா நாளை புதன்கிழமை மாலை 4.30 மணியளவில் அராலி வடக்கு குலனையூர் ஞானவைரவர் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது. (ம-66)

## பணியாளர்கள் தேவை

சாவகச்சேரியில் இயங்கும் எரிவாயு விநியோக நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் பணியாளர்கள் கோரப்படுகின்றனர்.

- சாரதி - கனரக வாகன அனுமதிப் பத்திரம் (AD License) அவசியம்)
- உதவியாளர் - சிலிண்டர் ஏற்றி இறக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும்

(CR/42829) J-1

077 225 0149, 074 394 6247

## மரண அறிவித்தல்



தோற்றம் 25 . 09 . 1930
மறைவு 15 . 07 . 2024

### சின்னத்தம்பி சரஸ்வதி

கோப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சின்னத்தம்பி சரஸ்வதி நேற்று (15.07.2024) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நவரத்தினம், இராசலட்சுமி, இராசதுரை, திலகவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சூரியகலாவின் அன்புத் தாயாரும், வரதராஜனின் அன்பு மாமியாரும், சித்திராங்கன் - துலாஞ்சலி, கீர்த்தனா - கஜீவ்ராஜ் கியோரின் அன்புப் பேர்த்தியும், தருண்யன், ஒனலி ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.07.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கந்தன்காட்டு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
076 568 8840

(CS/946) J-1

## மரண அறிவித்தல்



### மேதாகிருஷ்ணன் அன்ரனிற்றா(வேஜினி)

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மேதாகிருஷ்ணன் அன்ரனிற்றா (வேஜினி) அவர்கள் கடந்த 14.07.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வாமதேவன் மேதாகிருஷ்ணன் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை பியாற்றிஸ் செல்வரெத்தினம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வாமதேவன் சரோஜினி தேவி தம்பதியரின் அன்பு மருமகளும், பற்றீசியா, மரியதாசன் (கனடா), காலஞ்சென்ற சரோஜினி, மாலினி (கனடா), சாந்தி மற்றும் காலஞ்சென்ற பத்மினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், றஞ்சி, காலஞ்சென்றவர்களான அல்பேட், ஆனந்தன், ஜீவா மற்றும் லெஷ்லி மனோராஜ் ஆகியோரின் அன்பு மைத்துனியும் இராதகிருஷ்ணன், பாலகிருஷ்ணன் மற்றும் இராதராணி ஆகியோரின் அன்பு மைத்துனியும், லெஸ்லி, நளாயினி, பிறைற்றன், நிக்ஷன், ஜெயந்தி, பிரியா, ஜெயக்குமார், ஜெருட், கவாஸ்கர், செப்னி ஆகியோரின் சிறிய தாயாரும், கவிதா, றோய், ஷாம் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (16.07.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் அவரின் இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு புனித யுவானியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

113, புகையிரத வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்
நல்லூர்த் திருவிழாவை முன்னிட்டு
ஆடைகளின் சாம்ராஜ்யம்
இந்தியன் செலக்ஷனின்
ஆடி மாத ஆடை தள்ளுபடி



திருமணப்பட்டுச் சாறிகள்
கொட்டன் சாறிகள் சல்வார்கள்
சல்வார் துணிகள்
புத்தம் புது டொப் வகைகள்
மற்றும் சிறுவர் சிறுமிகளுக்கான ஆடைத் தெரிவுகள்...



இடம் : யாழ் வீரசிங்கம் மண்டபம்
காலம்: 12.07.2024 - 06.08.2024 வரை
ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்

## மரண அறிவித்தல்



தோற்றம் 24 . 03 . 1949
மறைவு 15 . 07 . 2024

### தமிழறிஞர் கலாபூஷணம் K.V.குணசேகரம்

**(முன்னாள் கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலய அதிபர் மற்றும் முன்னாள் நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர்)**

வெள்ளெருவைப் பிள்ளையார், கோப்பாய் மத்தி, கோப்பாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தமிழறிஞர் கலாபூஷணம் K.V.குணசேகரம் அவர்கள் நேற்று (15.07.2024) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - திரவியம் மற்றும் வைத்திலிங்கம் சீவரத்தினம் தம்பதியரின் மகனும், தம்பு முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், தர்மேந்திரா (மாவட்ட செயலகம்) வின் தாய் மாமனும், ராஜசிறியின் சிறிய தந்தையும், விகாஷ், காசினி, மிகேஷ் ஆகியோரின் அன்புப் பேரனும், ராஜேஸ்வரி, யோகேஸ்வரி, காலஞ்சென்ற விக்கினேஸ்வரி மற்றும் ராஜசிலோசனா (கனடா), அனுசியா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற பரமேஸ்வரி (சிங்கப்பூர்) மற்றும் கார்த்திகேயன், காலஞ்சென்ற யோகாம்பிகை மற்றும் நற்குணராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17.07.2024 புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு இல்லத்தில் இடம்பெற்று கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: தர்மேந்திரா
077 6660 342

(CS/948) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக நடைமுறை

## மன்னாரில் சஜித் தெரிவிப்பு



**மன்னார், ஜூலை 16**

**13ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக நடைமுறைப் படுத்தப்படும் என்றும், நாட்டின் கடல் வளங்கள் கொள்ளையிடப்படுவதைத் தடுக்கும் வகையில் நிரந் தரத் தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும் என்றும் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

நேற்று மன்னார் மாவட்டத்துக்குச் சென்ற எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, அங்கு பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொண்டார்.

மன்னாரில் உள்ள ரெலோ அலுவலகத்துக்குச் சென்ற அவர், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனைச் சந்தித்துக் கலந்துரையாடினார். அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவேன்.

மன்னார் மாவட்டத்தில் உள்ள மீனவர்களின் பிரச்சினையைத் தீர்த்து அவர்களுக்கு நிரந்தரத் தீர்வை வழங்க நடவடிக்கை எடுப்பேன். வடக்கு மக்களின் அரசியல் உரிமை, சமூக உரிமை, பொருளாதார உரிமை, மனித உரிமைகள் உட்பட அனைத்து உரிமைகளையும் பாதுகாக்கும் வகையில் செயற்றிட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளேன். நுண்கடன் திட்டம் ஊடாக பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு நிரந்தர தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டியுள்ளது. வடக்கு -கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு அவர்களை மையப்படுத்தி நிரந்தர தீர்வைப் பெற்றுக் கொடுக்கத் திட்டமிட்டுள்ளேன். மாகாணசபை முறைமையை வலுப்படுத்தி அதைப் பாதுகாக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு அமைய வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படும்- என்றார். (எ-இ)

# மாணவர்களுக்காகச் செயற்படும் ரணிலுக்கு நன்றியுடனிருப்போம்!

## வடக்கு ஆளுநர் தெரிவிப்பு



கிளிநொச்சி, ஜூலை 16

மாணவர்களின் எதிர்காலம் கருதிச் செயற்படும் ஜனாதிபதிக்கு எப்போதும் நன்றியுள்ளவர்களாக செயற்பட வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார். கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஜனாதிபதி புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலவசக் கல்வியை வழங்கும் நாடுகளில் இலங்கை முன்னிலையில் உள்ளது. கொரோனா பெருந்தொற்று, பொருளாதார நெருக்கடி, இயற்கை அனர்த்தம் என நாடு நெருக்கடியான சூழ்நிலையில் காணப்பட்ட போதும், இலவசக் கல்வி மற்றும் மருத்துவ சேவையைத் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றது அரசாங்கம். இவ்வாறான நிலையில் இலவச சேவைகளை முன்னெடுப்பதில் பின்வாங்கவில்லை. இளம் சமூகத்தினரின் கல்விக்கான முதலீடுகள் என்பது நாட்டின் முதுகெலும்பாகும். இதன் அடிப்படையில் நாட்டில் இலவசக் கல்விமுறை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதற்காக பெரியளவில் நிதி செலவிடப் படுகிறது.

கல்வி மாத்திரமே சமூகத்தை மாற்றக்கூடிய ஆயுதமாகக் காணப்படுகின்றது. சிறந்த கல்வியைப் பெற்றுக்கொள்வதைப் போலவே, திறன் மேம்பாடுகளையும் அபிவிருத்தி செய்து கொள்ளவேண்டும். நாட்டின் எதிர்காலத்தை மாற்றுபவர்களாக மாணவர்கள் உருவாகவேண்டும் - என்றார். (ப-26,27)

# பலாச் செய்கையை மேம்படுத்தத் திட்டம்

கொழும்பு, ஜூலை 16

நாட்டில் பலாப்பழத்துக்கான கேள்வி அதிகரித்துள்ளதால், ஏற்றுமதியை இலக்காகக் கொண்டு பலாச் செய்கையை மேம்படுத்துவதற்கு விவசாயத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் ஏழு புதிய வகையான பலாச் செய்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-25, 66)

# கஞ்சாவுடன் இருவர் கைது

கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் மானிப்பாய் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் மாலை இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். விசேட ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸாரே சந்தேகநபர்களைக் கைதுசெய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் 30 மற்றும் 31 வயதுடையவர்கள் என்றும், அவர்களிடம் இருந்து தலா 5 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-125)

# தேசிய மட்ட கோலூன்றிப்பாய்தல் மகாஜன மாணவர்கள் சாதனை




தேசியமட்ட கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவர்கள் சாதனை படைத்துள்ளனர். 20 வயதுப் பெண்கள் பிரிவு கோலூன்றிப்பாய்தலில் 3 மீற்றர் உயரம் தாண்டி மாணவி சி.சுவர்ணா இரண்டாமிடத்தையும், 20 வயது ஆண்கள் பிரிவு கோலூன்றிப்பாய்தலில் 3.9 மீற்றர் உயரம் தாண்டி மாணவன் சந்திரகுமார் துஷாந்தன் மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளனர். இந்தப்போட்டி கொழும்பு தியகம மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டரங்கில் நடைபெற்றுவருகிறது. (எ-25)

# தொழிற்சங்கப் போராட்டத்தை கூறுபோடவே வேதன அதிகரிப்பு

## வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவர் குற்றச்சாட்டு!

யாழ்ப்பாணம், ஜூலை 16

தொழிற்சங்கப் போராட்டத்தைக் கூறு போடவே, தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடாத அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு, அமைச்சரவையால் வேதன அதிகரிப்பு அங்கீகரிக்கப்பட்டது. இது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்படும் என்று வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவர் விஜயராசா விஜயரூபன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தற்போது நடைபெற்ற நியாயமான சம்பள உயர்வு கோரிய போராட்டத்துக்குப் பின்னரான ஒரு குழப்ப நிலையில் இந்த ஊடக சந்திப்பை ஏற்பாடு செய்துள்ளோம். நாங்கள் செய்த போராட்டம் என்பது பத்துடன் பதினொன்றாகப் பார்க்க முடியாத ஒரு போராட்டம். நியாயமான முறையில் ரூபா 25 ஆயிரத்தை நிபந்தனையற்ற முறையில் அரசு வழங்கவேண்டும் என்று ஒரு நியாயபூர்வமான கோரிக்கையை முன்வைத்துத் தான் இந்தப் போராட்டத்தில் நாங்கள் ஈடுபட்டு இருந்தோம்.

இந்தப் போராட்டத்தை நீர்த்துப்போகச் செய்யும் வகையிலான செயற்பாடுகள் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டிருந்தன. 8 ஆம், 9 ஆம் திகதிகளில் கடமைக்குச் சமுகமளித்த உத்தியோகத்தர்களை பாராட்டுகின்ற அல்லது ஊக்குவிக்கின்ற முகமாக அவர்களுக்கான ஒரு வேதன ஏற்றத்தையும் பதவியேறும்போது பயன்படுத்தக்கூடிய ஒரு பாராட்டுப் பத்திரத்தையும் வழங்குவதாக அமைச்சரவை அறிவித்திருக்கிறது.


நேர்மையான தொழிற்சங்கப் போராட்டங்களைக் கூறுபோடுகின்ற அரசாங்கத்தின் பிரித்தாளும் தந்திரம் இங்கே நேர்த்தியாக விதைக்கப்பட்டது . போராடாது உரிமைகளையும் நாங்கள் பெறமுடியாது - என்றார். (ப-125)

# மோட்டார் ஷெல் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 16

வேம்படி மகளிர் கல்லூரிக்கு அண்மையில் நேற்று மோட்டார் ஷெல் ஒன்று மீட்கப்பட்டுள்ளது. நீர் வழங்கல் நடவடிக்கைக்காக அகழ்வு மேற்கொள்ளப்பட்ட போது சந்தேகத்துக்கு இடமான பொருள் ஒன்று அவதானிக்கப்பட்டது. இது தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் ஷெல்லை இனங்கண்டு, அதை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். (எ-125)


கிளிநொச்சி, அக்கராயன் மகா வித்தியாலய மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் திருகோணமலையின் பல்வேறு இடங்களுக்கு கடந்த வெள்ளிக்கிழமை கல்விச் சுற்றுலா சென்றனர். (எ-25,13)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி அகழ்வுப்பணிகள் நிறைவுக்கு வந்தன

## இதுவரை 52 மனித எச்சங்கள் மீட்பு



**முல்லைத்தீவு, ஜூலை 16**

**கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழியின் மூன்றாம்கட்ட அகழ்வுப் பணிகள் நேற்றுடன் நிறைவுக்கு வந்தன. இதுவரை இந்த மனிதப் புதைகுழியில் இருந்து 52 மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

இது தொடர்பாக விஷேட சட்ட மருத்துவ நிபுணர் கனகசபாபதி வாசுதேவ தெரிவித்ததாவது:-

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வாராய்ச்சியின் 10ஆவது நாளான இன்று (நேற்று) ஐந்து மனித எச்சங்கள் முழுமையாக வெளியே அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளதுடன் துப்பாக்கிச் சன்னம், திறப்புக் கோர்வை என்பனவும் மீட்கப்பட்டுள்ளன.

இரண்டு கட்டங்களிலும் அகழ்ந்தெடுக்கப்பட்ட 40 மனித எச்சங்களுக்கு மேலதிகமாக மூன்றாம் கட்ட அகழ்வுப் பணியின் போது இன்றுடன் (நேற்றுடன்) 52 மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டு அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. அடுத்துவரும் நாள்களில் இந்தப் புதைகுழி தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகள் தொடரும் - என்றார்.

**பின்னணி**

கடந்த 2023ஆம் ஆண்டு ஜுன் மாதம் 29ஆம் திகதியன்று, முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் பகுதியில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினர் நீர்இணைப்பினைப் பொருத்துவதற்காக, கனரக இயந்திரத்தின் மூலம் நிலத்தினை அகழ்ந்தபோது மனிதப் புதைகுழியொன்று இனங்காணப்பட்டிருந்தது.

இதனையடுத்து முல்லைத்தீவு நீதிமன்றம், முல்லைத்தீவு சட்டமருத்துவ அதிகாரி ஆகியோரின் கண்காணிப்பு மற்றும் பங்குபற்றுதல்களுடன், தொல்லியல் துறைப் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினரால் அந்த மனிதப்புதைகுழியில் இரண்டு கட்டங்களாக அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகள் கடந்த 4ஆம் திகதி ஆரம்பமான நிலையில் நேற்றுடன் அகழ்வுப் பணிகள் முடிவுக்கு வந்துள்ளன. (ம)

# போராட்டத்தில் பங்கேற்காதோருக்கு ரூபா 10 ஆயிரம்

## அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஜூலை 16

அரச ஊழியர்கள் சுகவீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில், அதில் கலந்துகொள்ளாது கடமைக்கு சமுகமளித்த நிறைவேற்று தரம் அல்லாத அனைத்து அரச ஊழியர்களுக்கும் 10 ஆயிரம் ரூபா ஒரு தடவை வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியதுடன் பாராட்டுச் சான்றிதழையும் வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (ஒ-இ)

# மூத்த எழுத்தாளரான குணசேகரம் மறைவு!



கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தின் முன்னாள் அதிபரும் நல்லூர் கல்விக் கோட்டத்தின் முன்னாள் பணிப்பாளரும் தமிழ் எழுத்தாளருமாகிய கே.வி.குணசேகரம் (வயது- 74) நேற்றுக் காலமானார்.

சிறுகதைகள், நாவல்கள், கட்டுரைகள் எனப் பலவற்றை எழுதிக்குவித்த அவர், பல நூல்களை வெளியீடு செய்தவர். திருக்குறள் பாக்களுக்கு எளிமையாக விளக்கம் வழங்கும் முயற்சியாக சிறுசிறு கதைகளை எழுதியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-555)


# உருக்குலைந்த நிலையில் கல்முனைக் கடலில் சடலமொன்று மீட்பு

கிளிநொச்சி, ஜூலை 16

பூநகரி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்முனை தெற்கு கடற்கரைப் பகுதியில், ஆணொருவரின் சடலமொன்று நேற்று உருக்குலைந்த நிலையில் கரையொதுங்கியுள்ளது. குறித்த சடலம் தொடர்பான ஆளடையாளங்கள் இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை. மேலதிகவிசாரணைகளை பூநகரி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ-ம-113)



மன்னார் மாவட்டத்துக்கு நேற்றுத் திங்கட்கிழமை பயணம் மேற்கொண்ட எதிர்க்கட்சித் தலைவர் சஜித், ரெலோ அமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதனின் மன்னார் அலுவலகத்திற்குச் சென்று அவரைச் சந்தித்துக் கலந்துரையாடினார். (ம-66)



கிளிநொச்சி, முழங்காவில் மகா வித்தியாலயத்தில் தரம் 9, உயர்தர மாணவர்களுக்கான திறன் விருத்தி செயலமர்வு பூநகரி பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் அண்மையில் நடைபெற்றது. செயலகத்தின் கலாசார உத்தியோகத்தர், சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர், மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் கலந்துகொண்டு செயலமர்வை நெறிப்படுத்தினர். (ம-159)


## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 18.03.1955 இறப்பு 14.07.2024

சங்க உறுப்பினர் செ.சுதர்சன் அவர்களின் பாசமிகு தந்தையார்

**ஐ.செல்வரத்தினம்**


அவர்கள் நேற்று முன்தினம் (14.07.2024) ஞாயிற்றுக் கிழமை அன்று இறைபதம் அடைந்தார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


**ஊழியர் நலன்புரி சங்கம், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரந்தனில்...

நான்கு அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் ஆராயும் நோக்கில் முதலீட்டு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம நேற்றுத் திங்கட்கிழமை வடக்குக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார். இதன் ஓர் அங்கமாக அவர் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலைக்குப் பயணம் மேற்கொண்டார். 230 ஏக்கர் நிலப்பரப்பில் அமையப் பெற்ற குறித்த தொழிற்சாலையினை விசேட முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்கள் உருவாக்கும் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யும் நோக்கிலேயே இந்தப் பயணம் அமைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (அ-ம-66-113)





## சாவகச்சேரி...

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் பதில் மருத்துவ அத்தியட்சகராகக் கடமையாற்றிய இராமநாதன் அர்ச்சுனாவை சாவகச்சேரி ஆதார மருத்துவமனையிலிருந்து இடமாற்றம் செய்ய உத்தரவிடும் சுகாதார அமைச்சகத்தின் கடிதம் கடந்த 7ஆம் திகதி இரவு வடக்கு மாகாணச் சுகாதாரப் பணிப்பாளர் சமன் பத்திரன மருத்துவர் அர்ச்சுனாவிடம் வழங்க முற்பட்டபோது அதனை ஏற்கமறுத்த பதில் மருத்துவ அத்தியட்சகர் 'இது அலுவலக நேரம் அல்ல' எனத் தெரிவித்து அதை வாங்க மறுத்திருந்தார்.

இந்த நிலையில் மருத்துவரை இடமாற்றும் முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து மருத்துவமனை முன்பாக 7ஆம் திகதி இரவு ஆரம்பித்த கண்டன ஆர்ப்பாட்டம் மறுநாள் 8ஆம் திகதி அதிகளவான மக்களின் பங்கேற்புடன் நண்பகல் வரை முன்னெடுக்கப்பட்டது. கண்டன ஆர்ப்பாட்டத்துக்கு ஆதரவாகச் சாவகச்சேரி நகரப் பகுதிகளில் வர்த்தக நிலையங்கள், பொதுச்சந்தை என்பன மூடப்பட்டிருந்தன.

இந்த நிலையில் 8ஆம் திகதி நீண்ட இழுபறியின் பின்னர் நண்பகலுடன் மருத்துவமனையிலிருந்து வெளியேறி மருத்துவர் அர்ச்சுனா கொழும்பு சென்றிருந்தார். இவ்வாறு செல்லும்போது தான் விடுமுறையில் செல்வதாகவும் மீண்டும் வருவேன் எனவும் கூறியே அவர் வெளியேறியிருந்தார். இதனையடுத்து மக்களின் போராட்டமும் நிறைவுக்கு வந்தது. இந்த நிலையில் மறுநாள் 9ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வடமாகாணச் சுகாதாரத் திணைக்களத்தால் மருத்துவர் கோ. ரஜீவ் புதிய பதில் அத்தியட்சகராக நியமிக்கப்பட்டுப் பொறுப்பேற்றுக் கொண்டார். எனினும், குறித்த நியமனம் முறையற்றது என மருத்துவர் அர்ச்சுனா வீடியோ ஒன்றின் மூலம் தெரிவித்திருந்தார்.

'விடுமுறையில் சென்ற தான் விடுமுறை முடிய மீண்டும் வந்துள்ளேன்' என முன்னாள் பதில் மருத்துவ அத்தியட்சகர் அர்ச்சுனா நேற்றுக் காலை பதில் மருத்துவ அத்தியட்சகருக்கு உரிய அறைக்குச் சென்று அமர்ந்தார். இதனால், மருத்துவமனையில் பரபரப்பான சூழல் ஏற்பட்டிருந்தது.

இதையடுத்து பாதுகாப்புக்காகப் பொலிஸார் மருத்துவமனை வளாகத்தில் குவிக்கப்பட்டனர். முன்னாள் பதில் மருத்துவ அத்தியட்சகர் அர்ச்சுனாவை வரவேற்கவும், அவருக்கு ஆதரவு வழங்கும் முகமாகவும் சாவகச்சேரி ஆதார மருத்துவமனை முன்பாக மக்கள் ஒன்று கூடிய நிலையில் பொலிஸார் மக்களை அங்கிருந்து அப்புறப்படுத்தினர். இதன்போது ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அதன் பின்னர் மருத்துவர் அர்ச்சுனா, "இந்த விவகாரம் குறித்து ஆராய சுகாதார அமைச்சில் இருந்து குழு ஒன்று வர வுள்ளது. அவர்கள் வந்ததும் இந்த விடயத்துக்கு ஒரு முடிவுகிட்டும். அதுவரை மருத்துவர் ரஜீவ் பணியில் தொடரட்டும்" என்று கூறிவிட்டு, மருத்துவமனையை விட்டு வெளியேறினார் என்பது குறிப்பிடத்தக்கது.

(அ-ம-66-20-26)

## சிறிலங்காப்...

"சர்வதேச சட்டதிட்டங்களுக்கு அமைய வே போர் நடத்தப்பட்டது. போரின் இறுதிக் கட்டத்தில் கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தவில்லை. மனிதாபிமான நடவடிக்கையின்போது (போர்) 40 ஆயிரம் சிவிலியன்கள் கொல்லப்பட்டனர் எனக் கூறப்படுவதை ஏற்க முடியாது. போரைத் திரிவுபடுத்திக்கூறி நன்மையடையும் சிலர் உள்ளனர். அவர்கள்தான் இவ்வாறான கருத்துகளை முன்வைக்கின்றனர்.

போர் முடிவடைந்து 6 மாதங்களின் பின்னர் நான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டேன். தமிழ் மக்கள் அமோக ஆதரவை வழங்கினர். மக்கள் அவ்வாறு கொல்லப்பட்டிருந்தால் இப்படி ஆதரவு வழங்கி இருப்பார்களா? இராணுவத்தினர் மீது கோபம் இருந்திருந்தால் வாக்களித்திருப்பார்களா?

புலிகள் மக்களைப் பணயக்கைதிகளாக பிடித்து தமது இருப்பை தக்கவைக்க முற்பட்டனர். ஆனால், நாம் மக்களை பாதுகாத்து போரை முடித்தோம். போரின் இறுதிக் கட்டத்தில் 10, 15 கிலோமீற்றருக்குள் மக்கள் முடங்கிய போது நாம் கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தவில்லை. சிறு ஆயுதங்களைப் பயன்படுத்தியே போரிட்டோம். அதனால்தான் குறுகிய காலப்பகுதிக்குள் 2 ஆயிரம் படையினரை இழக்க நேரிட்டது.

போரில் முன்களத்தில் எவ்விதக் குற்றச் செயல்களும் இடம்பெறவில்லை. போர் முடிந்த பிறகு இடம்பெற்ற ஓரிரு சம்பவங்கள் உள்ளன. இரு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. அவை தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்தேன். ஆனால், இரு மாதங்களில் நான் பதவி விலகிவிட்டதால் விசாரணை தொடரவில்லை. எமக்கு இழப்புகள் ஏற்பட்டபோதும், இறுதிவரை நாம் சர்வதேச விதிமுறைகளின் பிரகாரமே போர் செய்தோம்" - என்றார். (அ-ம-44)

## குழந்தை...

பட்டதாகவும், விபத்தின் பின்னர் விபத்தை ஏற்படுத்தியவர்கள் தப்பிச் சென்றுள்ளனர் என்றும் சம்பவத்தை நேரில் பார்த்த பொதுமக்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

இளவாலை பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ள நிலையில், மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

(அ-ம-20)

## யாழ். நகரில்...

நிலையத்துக்கு முன்பாக அமைந்துள்ள தங்கத் தாத்தா நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் உருவச் சிலையடியில் இடம்பெறவுள்ளது.

சோமசுந்தர ஞானத் தமிழ்மன்றத்தின் தலைவர் கே. எஸ். சிவஞானராஜா தலைமையில் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (அ-ம-66)

## பிற்போடக்...

மன்றத்தால் நேற்றுத் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

சட்டத்தரணி அருண லக்சிறி உனவட்டுனவால் கடந்த 12ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்டிருந்த மேற்படி அடிப்படை உரிமை மனு, பிரதம நீதியரசர் ஜயந்த சூயசூரிய, நீதியரசர்களான அர்ஜுன ஒபேசேகர, பிரியந்த பெர்னாண்டோ ஆகிய மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் நேற்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போதே மனு விசாரணைக்கு எடுக்காமல் தள்ளுபடி செய்யப்பட்டது. அத்துடன், வழக்குக் கட்டணமாக 5 இலட்சம் ரூபாவை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் மனுதாரர் செலுத்த வேண்டும் எனவும் மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் உத்தரவிட்டுள்ளது.

சட்டமா அதிபர் சார்பில் நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்த பிரதி சொலிசிட்டர் ஜெனரல், குறித்த மனு அடிப்படைக் காரணமின்றி தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் தள்ளுபடி செய்யுமாறு கோரிக்கை விடுத்திருந்தார். அவரது சமர்ப்பணத்தின் அடிப்படையில் மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

"நீதிமன்றம் சிறந்த தீர்ப்பை வழங்கியுள்ளது. எனவே, இனியாவது கோமாளி வேலைகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைவிட வேண்டும்" என்று மேற்படி தீர்ப்பு தொடர்பில் நீதிமன்ற வளாகத்தில் வைத்து சட்டத்தரணி சுனில் வட்டவள கருத்துத் தெரிவித்தார். (அ-ம-44)

## கல்விசாரா...

ஊதிய உயர்வை நடைமுறைப்படுத்துமாறும், இதர கொடுப்பனவுகளை வழங்குமாறும் வலியுறுத்தி பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் தொடர் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். இந்த வருடத்தில் கொடுப்பனவுகள் மற்றும் ஊதிய உயர்வுக்குச் சாத்தியம் இல்லை என்று ஜனாதிபதி ரணில் அறிவித்திருந்த நிலையில், பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் போராட்டம் தொடர்ந்து வந்தது. இந்த நிலையில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவருடனும் கல்வி அமைச்சருடனும் நேற்று நடைபெற்ற பேச்சுகளைத் தொடர்ந்தே போராட்டம் முடிவுக்கு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-ம-6-26)

## மின்சாரக்...

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு அனுப்பியிருந்தது.

இதற்கமைய, 0 முதல் 30 வரையான மின் அலகு ஒன்றின் கட்டணம் 2 ரூபாவாலும், 30 முதல் 60 வரையான அலகு ஒன்றின் கட்டணம் 11 ரூபாவாலும் குறைக்கப்பட்டுள்ளது.

60 முதல் 90 வரையான அலகு ஒன்றின் கட்டணம் 12 ரூபாவாலும், 90 முதல் 120 வரையிலான அலகு ஒன்றின் கட்டணம் 20 ரூபாவாலும் குறைக்கப்பட்டுள்ளதாக இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதன்படி, வீட்டுப் பாவனை மின் கட்டணம் 27 சதவீதத்தாலும், மதத் தலங்களுக்கான மின் கட்டணம் 30 சதவீதத்தாலும், விருந்தகங்கள் மற்றும் கைத்தொழிற்துறைக்கான கட்டணம் 25 சதவீதத்தாலும் குறைவடையவுள்ளது.

(அ-ஒ-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவில் பாதுகாப்பு அதிகரிப்பு

அமெரிக்காவின் ஜனாதிபதி வேட்பாளரான ட்ரம்ப் மீதான தாக்குதல்களையடுத்து கனடாவில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

கனேடிய பொதுப்பாதுகாப்பு அமைச்சர் டொமினிக், கனடாவின் பாதுகாப்புகள் அதிகரிக்கப்பட்டுள்ளன என்ற விடயத்தைத் தெரிவித்துள்ளார். பொலிஸ்மா அதிபர், கனடிய புலனாய்வுப் பிரிவுப் பணிப்பாளர் உள்ளிட்டவர்களை சந்தித்து பாதுகாப்பு நிலைமைகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார். (ம)



# ட்ரம்ப் மீது துப்பாக்கிச்சூடு: விசாரணைகள் தீவிரத்தில்!

**வொஷிங்டன், ஜூலை 16**

**அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியவர் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று அமெரிக்க மத்திய புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.**

அமெரிக்காவின் பென்சில்வேனியா மாநிலத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தேர்தல் பரப்புரையின்போது ட்ரம்ப் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இதன்போது காதுப் பகுதியில் ட்ரம்ப் காயமடைந்தார். சில இன்ஞ்களில் ட்ரம்ப் உயிர் தப்பும் வீடியோக்கள் வெளியாகி பதைபதைக்க வைத்துள்ள பின்னணியில், தாக்குதல்தாரி தொடர்பான விசாரணைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இதன்படி, துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டவர் உளரீதியான பாதிப்புக்குஉள்ளானவர் என்பதற்கான அறிகுறிகள் எதுவுமில்லை என தெரிவித்துள்ள புலனாய்வுப் பிரிவு அதிகாரியொருவர் அவரது நோக்கம் குறித்தே கவனம் செலுத்துவதாகவும், குறிப்பாக சமூக ஊடகங்களில் அவரது பதிவுகளை ஆராய்வதாகவும் தெரிவித்துள்ளார்.

இதுவரை ஆபத்தான அச்சுறுத்தலான விடயங்கள் எதனையும் காணமுடியவில்லை விசாரணைகள் ஆரம்பகட்டத்திலேயே உள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பழைச் சந்தியில் இருந்து 200m தெற்கில் காங்கேசன்துறை வீதியில் உள்ள உப்புமாவடி ஒழுங்கையில் 50m தூரத்தில் 4 பரப்பு 5.28 குழி காணி விற்பனைக்கு உண்டு. விலை பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்புகளுக்கு :- 077 608 7502

(CS/927) J-1

## காணி விற்பனைக்கு

சுழிபுரம் மத்தி ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலைக்கு அருகாமையில் நன்னீர் கிணற்றுடன் கூடிய 3 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

12 அடி ஒழுங்கையில் குறித்த காணி அமைந்துள்ளது.

தொடர்புகளுக்கு: 077 143 2539

## வங்கி மீதி வசதி (SHOW MONEY)

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக்கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்

தொடர்புகளுக்கு:

074 173 7684

(CS/55548) J-1

## தவறவிடப்பட்டுள்ளது

கந்தர்மடம் நல்லூர் அருகாமையில் அடையாள அட்டை தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு:- 077 706 4041

(CS/55678) J-1

## காணி, வீடு விற்பனைக்கு உண்டு

கோப்பாய் தெற்கு கிராம சபை ஒழுங்கையில் கிராம சேவையாளர் பிரிவு J/260 நில. பர. 3 குளி 8.50 அளவுள்ள **காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு.**

077 967 2152, 077 902 4248

(CS/55677) J-1

*இம்ரான் கானின்*

# தெஹ்ரிக் இன்சாப் கட்சிக்குத் தடை!

சிறையில் அடைக்கப்பட்டுள்ள பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் பாகிஸ்தான் தெஹ்ரிக் இன்சாப் கட்சியை தடைசெய்ய பாகிஸ்தான் அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

தேசத் துரோகம், சட்டவிரோத நிதி வசூலிப்பு, இஸ்லாமிய அவமதிப்பு உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளுக்காக இம்ரான் கான் கடந்த பல மாதங்களாகச் சிறையிடப்பட்டுள்ள நிலையில், இதே காரணங்களைக் கருத்திற்கொண்டே இம்ரான் கானின் பாகிஸ்தான் தெஹ்ரிக் இன்சாப் கட்சியை தடைசெய்ய பாகிஸ்தான் அரசாங்கம் முடிவு செய்துள்ளது என்று பாகிஸ்தானின் அமைச்சர் அதாவுல்லா தெரிவித்துள்ளார்.

"இனி பாகிஸ்தானும், தெஹ்ரிக் இன்சாப் கட்சியும் இணைந்திருக்க முடியாது. உச்ச நீதிமன்றத்தில் தெஹ்ரிக் இன்சாப் கட்சிக்கு தடை விதிப்பது தொடர்பாக மனுத்தாக்கல் செய்யவுள்ளோம். மேலும், இம்ரான்கான் மற்றும் முன்னாள் அதிபர் ஆரிப் ஆல்வி மீது தேசத் துரோக வழக்குப் பதிவு செய்யவும் அரசு



முடிவு செய்துள்ளது" என்று அமைச்சர் அதாவுல்லா மேலும் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் இறுதியாக நடைபெற்ற பொதுத் தேர்தலின்போதும், இம்ரானைச் சிறை வைத்திருந்த அரசாங்கம் அவருடைய கட்சியையும் முடக்கியிருந்தது. எனினும், பொதுமக்களின் ஆதரவு இம்ரானின் கட்சிக்கே கிட்டியது. இதனால் பாகிஸ்தான் வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத வகையில், ஷெரீப் மற்றும் பூட்டோவின் கட்சிகள் இணைந்து இம்முறை ஆட்சியமைக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டன. (ம)

# மரண அறிவித்தல்

| உருவாய் | | அருவாய் |
|---|---|---|
| 02 | | 13 |
| 04 | | 07 |
| 1947 | | 2024 |



## திருமதி இராஜேஸ்வரி செல்வரட்ணம்

யாழ்ப்பாணம் கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராஜேஸ்வரி செல்வரட்ணம் கடந்த (13.07.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நரசிங்கம் - இராசம்மா தம்பதியினரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான கோப்பாய் தெற்கு கும்பப்பிள்ளையைச் சேர்ந்த செல்லையா - வள்ளியம்மை தம்பதியினரின் பாசமிகு மருமகளும், செல்வரட்ணத்தின் அன்பு மனைவியும், செல்வமுரளி, ரஜனி (கலாசார உத்தியோகத்தர் - பிரதேச செயலகம்-சண்டிலிப்பாய்), செல்வமோகன் (பொறியியலாளர் - அமெரிக்கா), செல்வஜிந்தன் (அலுவலகப் பொறுப்பாளர், போதனாசிரியர் - தொழிற்பயிற்சி அதிகார சபை-சம்பூர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், நளாயினி மேஜர்.நா.நரேந்திரா (அலுவலகப் பொறுப்பாளர் தேசிய இளைஞர் படையணி-முல்லைத்தீவு, ஆசிரியர் - யாழ்ப்பாணம் கொக்குவில் இந்துக் கல்லூரி), டனிஷா ஷஜீவினி ஆகியோரின் மாமியாரும், செந்துஜி, பிரவீனா, பிருந்தாபன், பிரதீபன், பிரசாந்தினி, பிரசாந்தன், செந்துஜன், செந்தீபன் ஆகியோரின் பாசமிகு பாட்டியும், காலஞ்சென்றவர்களான தனபாலசிங்கம், நாகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.07.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இராஜேஸ் பவனம்**
**பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கு**
**கொக்குவில்**
**யாழ்ப்பாணம்**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**0764669188**

(CS/944) J-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.07. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.